**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>**

**<u>அசல் வழக்கு எண்.101 /2022</u>**

DW1 – திருமதி.கற்பகம் நாள். 08.08.2025

(1969ம் ஆண்டில் 44வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்.,பி. (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Assistant (உதவியாளர்) திரு.அழகர்சாமி என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எனது தந்தை பெயர் வீரப்பன், எனது தாய் பெயர் காளியம்மாள். எனது தந்தையின் தந்தை பெயர் ஆறுமுகம். எனது சொந்தஊர் திருபுனவாசலை அடுத்த அடம்பூர். தாவா சொத்தானது முகம்மது ஜெயலானி மகன் முகம்மது அப்துல் காதர் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணமானது பட்டாவா என்றால் இல்லை, பத்திரம் தான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தானது முகம்மது ஜெயலானி மகன் முகம்மது அப்துல் காதர் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்பதற்கு கிரையப்பத்திரத்தை தவிர வேறு எந்த ஆவணமும் என்னிடம் இல்லை என்றால் சரிதான்.

2. தாவா சொத்தானது மேற்படி முகம்மது அப்துல் காதர் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது இல்லை என்றும் நான் தவறான பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பி.வா.ச.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண்.139/3ல் யார் பெயர் இடம் பெற்றள்ளது என்றால் சத்திரம், நாகநாதசேதுபதி ஆகியவர்கள் பெயர் இடம்பெற்றுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி தாவா சொத்தானது சுப்பிரமணிய பெயருக்கு கிரையம் எழுதிக் கொடுத்த முகம்மது அப்துல்காதர் குடும்பத்திற்கு பாத்தியமில்லை என்பது தெளிவாக

நிரூபணமாகி உள்ளது என்றால் சரியல்ல.

3. தாவா சொத்தில் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 20 செண்ட். சுப்பிரமணியன் பெயரில் ஏற்பட்டுள்ள கிரையப்பத்திரத்தில் எவ்வளவு விஸ்தீரணம் சொத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தை பொறுத்து 1 முதல் 7 பிரதிவாதிகள் நடத்திய OS.15/2012 வழக்கிற்கும் இவ்வழக்கின் வாதியாகிய சாகுல் ஹமீதுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி OS.15/2012 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பும் நான் 02.11.1963 ம் தேதி சுப்பிரமணியன் பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரமும் தாவா சொத்தில் வாதிக்கு உள்ள உரிமையை கட்டுப்படுத்தக்கூடியது இல்லை என்றால் சரியல்ல.

4. மேற்படி 02.11.1963 ம் தேதி ஏற்பட்ட கிரையப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான்தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலம் பாரா 12 ல் தாவா வழக்கனா resjudicata தோசத்திற்கு உள்ளாகி உள்ளது என குறிப்பிட்டுள்ளது தவறு என்றும் இவ்வழக்கின் வாதியை பொறுத்து resjudicata தோசம் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தை நான் தான் அனுபவம் செய்து வருகிறேன் என தெரிவித்திருப்பது தவறு என்றும் மேற்படி தாவா சொத்தை வாதியும் 1 முதல் 9 பிரதிவாதிகளும் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது வாதி மற்றும் 1 முதல் 7 பிரதிவாதிகளின் முன்னோர்கள் மற்றும் 8, 9 பிரதிவாதிகளின் தந்தையான சேது என்ற சேதுராமன் ஆகியவர்களுக்கு கூட்டு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. என்றும் மேற்படி கூட்டு பாத்தியப்பட்ட சொத்து என்பதற்கு என்றால் சரியல்ல.

5. தாவா சொத்தானது மேற்படி கூட்டு பாத்தியப்பட்ட சொத்து என்பதற்கு வாதி மற்றும் பிற பிரதிவாதிகள் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. சுப்பிரமணியன் என்பவருக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் நான் மேற்படி சுப்பிரமணியனின் வாரிசு என வழக்காடுவது தவறு என்றால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யானது மற்றும் கற்பனையானது என்றால் சரியல்ல. வாதிக்கு பிராது பிரகாரம் பரிகாரம்

கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

(ஓம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருவாடானை